இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 28.03.2026

# திருநங்கையர் உரிமை காக்கப்பட வேண்டும்!

**எதையெல்லாம் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல், எதை எல்லாம் செய்யக் கூடாதோ அதைச் செய்து கொண்டு இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. நாடே சிலிண்டர் தட்டுப்பாட்டால் இருக்கிறது. அதைப் பற்றிய கவலையோ, அதைச் சரி செய்வதற்கான முயற்சியோ கவலையோ பிரதமர் மோடிக்கு இல்லை. 'கொரோனா காலத்துக்குத் தயார் ஆகுங்கள்' என்று சொல்லிவிட்டு கைகழுவத் தயாராகி வருகிறார். இன்னொரு பக்கத்தில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி திசை திருப்பிக் கொண்டு இருக்கிறார். அதில் ஒன்றுதான் 'திருநங்கையர் திருத்த மசோதா' ஆகும்.**

"திருநங்கையர் திருத்த மசோதாவை நிறுத்தி வைக்க வேண்டும். திருநங்கையர் திருத்த மசோதா விவகாரத்தில் ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும். திருநங்கையர் திருத்த சட்ட மசோதாவை நிறுத்தி வைத்து ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும். 'திருநங்கைகள் சட்டம், 2019'இல் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை, வலுக்கட்டாயமாகச் செயல்படுத்தக் கூடாது. திருத்தச் சட்டத்தால் பாதிக்கப்பட இருக்கும் மக்களின் கருத்துகளைக் கேட்காமல் திருத்தங்களை மேற்கொள்ளக் கூடாது. ஒன்றிய அரசின் திருத்தத்தை திருநங்கையர்கள் எதிர்க்கும்போது அந்தச் சட்டத்தை ஒன்றிய அரசு திணிக்கக் கூடாது" என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்கள். அந்தளவுக்கு மோசமான சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றி உள்ளது.

**இந்த மசோதாவை ஆதரித்து பாதம் தாங்கி பழனிசாமி கட்சியைச் சேர்ந்த தம்பிதுரை பேசி இருக்கிறார். பா.ஜ.க.வுக்கு கூஜா தூக்குவதில் மட்டுமல்ல; மக்களுக்குத் துரோகம் செய்வதிலும் முந்தி நிற்பது அ.தி.மு.க.தான்.**

யாருடைய எதிர்ப்பைப் பற்றியும் பா.ஜ.க.வுக்கு கவலை இல்லை. அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு மட்டுமல்ல; சமூக அக்கறையுள்ள அனைவருமே எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறார்கள். 'திருநங்கைகள் திருத்த மசோதா 2026'க்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேசிய திருநங்கைகள் மன்றத்தின் உறுப்பினர்களான தெற்கு மண்டலப் பிரதிநிதி கல்கி சுப்பிரமணியமும், வடக்கு மண்டலப் பிரதிநிதி ரிதுபர்ணா நியோக்கும் தங்கள் பதவியை விட்டு விலகி இருக்கிறார்கள். இந்தத் திருத்த மசோதா, திருநங்கைகள் தங்கள் பாலினத்தை தாங்களே சுயமாக அடையாளம் காணும் அடிப்படை உரிமையைப் பறிப்பதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மசோதாவை இறுதி செய்வதற்கு முன்பு சமூகப் பிரதிநிதிகளிடமோ அல்லது தங்கள் மன்றத்திடமோ உரிய ஆலோசனைகள் எதுவும் நடத்தப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'இந்தச் சட்டத் திருத்தம் திருநங்கைகளின் கண்ணியத்திற்கு எதிரானது என்றும் அடிப்படை உரிமைகளில் இது ஒரு 'பின்னோக்கிய அடி' என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

திருநங்கைகள் உரிமைகள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு, ஒன்றிய சமூக நீதித்துறை அமைச்சர் வீரேந்திர குமாருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. அதில், 'திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்ட மசோதா 2026'ஐத் திரும்பப் பெறுமாறு கோரிக்கை விடுத்தது. ஆனால் அதே நாளில்தான் மக்களவையில் இந்த சர்ச்சைக்குரிய சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு உள்ளது.

'Trans Amendment Bill 2026' என்பது மக்களவையிலும் மாநிலங்களவையிலும் பலத்த எதிர்ப்புகளுக்கு இடையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது வரை சட்டத்தால் தரப்பட்ட உரிமையை இம்மசோதா பறிப்பதாக திருநர், திருநங்கைகள் குற்றம் சாட்டுகிறார்கள். 2019 ஆம் ஆண்டைய சட்டத்தின் படி ஒருவர் மூன்றாம் பாலினத்தவராக இருந்தால், தாங்களாகவே மூன்றாம் பாலினத்தவர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். இந்தச் சட்ட திருத்தத்தில் இந்த உரிமை நீக்கப்படுகிறது. இனி, அரசு மூன்றாவது பாலினத்தைச் சரிபார்த்து உறுதிப்படுத்தி, அதற்கு மாவட்ட ஆட்சியரிடம் இருந்து ஒப்புதல் பெற்ற பின்னரே சம்பந்தப்பட்ட நபரை மூன்றாவது பாலினத்தைச் சேர்ந்தவராக எடுத்துக்கொள்ள முடியும். "திருநங்கைகள் அவர்களது தன்மையை மருத்துவக் கவுன்சில் முன்பும் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பும் நிரூபிக்க வேண்டும்" என்பது கடுமையான கண்டனத்துக்கு உரியது ஆகும்.

2019 சட்டத்தில் இருந்த "selfidentification" முறையை நீக்கி, 'மருத்துவக் குழு சான்றிதழ் அவசியம்' என மாற்றியிருப்பது மிகக் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியது ஆகும்.

2014 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய நல்சா (NALSA) தீர்ப்பின் அடிப்படையில் திருநங்கைகள் எப்படி இருக்க வேண்டும், அவர்களுக்கு எத்தகைய சட்டத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று அழகாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் 2019ல் ஒன்றிய அரசு ஒரு மசோதாவை நிறைவேற்றியது. அதிலும் சில முன்னோக்கிய மாறுதல்கள் வேண்டும் என்று கோரிக்கை வைத்து வந்த சூழலில், இன்னும் பின்னோக்கிப் போக வைத்துள்ளது பா.ஜ.க.வின் மசோதா.

"எங்களைக் குறிப்பிட அரவாணி, யூனக் என்ற வார்த்தைகளை ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. 'யூனக்' என்ற சொல்லின் பொருள் 'விதையடிக்கப்பட்ட ஆண்' என்பதாகும். ஆகையால் அந்தச் சொல்லையும் இந்த திருத்தச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும். வீட்டில் இருந்து விரட்டியடிக்கப்படும் எங்களைப் பாதுகாக்கும் வேலைகளைச் செய்வோருக்கு தண்டனை வழங்கும் விதமாக சட்டங்கள் உள்ளன. அவற்றையும் நீக்க வேண்டும்" என்று திருநங்கையர் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

**கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு, வயது தளர்வு மற்றும் மதிப்பெண் தளர்வு, கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளுக்கான அணுகல் எளிமையாக்கல், வீட்டு வசதித் திட்டங்கள், பொதுப் போக்குவரத்து, தரமான மற்றும் அணுகக்கூடிய சுகாதாரச் சேவைகள், ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட அவர்களது எந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றாமல், அவர்களது அடையாளத்தை நிரூபிப்பதுதான் முக்கியமானது என்ற சிக்கலை உருவாக்கி இருக்கிறது பா.ஜ.க. அரசு.**

திருநங்கையர், நம்பிகள், மூன்றாம் பாலினத்தவர் (இன்னும் பல்வேறு பெயர்களில்...) என்று அழைக்கப்படுபவர்களின் உரிமைகளைக் காக்க வேண்டும். குரலற்ற அவர்களின் குரல்வளையை நெரிக்கும் செயலை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்த வேண்டும்! நிறைவேற்றப்பட்ட மசோதாவை நிறுத்தி வைக்க வேண்டும்!

●●

## அரசு மருத்துவமனைகளில் 25,295 புதிய பணி நியமனங்கள்

# மருத்துவத் துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

## ரூ.4179 கோடியில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்; ரூ.1789 கோடியில் மருத்துவ சாதனங்கள்!

**சென்னை, மார்ச் 28–**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் புதிதாக**

- **ரூ. 4179 கோடியில் 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்;**
- **ரூ.1,789 கோடியில் சி.டி.ஸ்கேன் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே முதலிய 99,668 மருத்துவ சாதனங்கள்;**
- **ரூ. 211 கோடியில் சென்னை பெரியார் அரசு மருத்துவமனை;**
- **ரூ. 446 கோடியில் சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை;**
- **ரூ. 68 கோடியில் புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை!**
- **ரூ. 240 கோடியில் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மேம்பாடு;**
- **ரூ. 34.6 கோடியில் சென்னை ஓமந்தூரார் உயர்நோக்கு மருத்துவமனை மேம்பாடு;**

**அரசு மருத்துவமனைகளில் 25,295 புதிய பணிநியமனங்கள்!**

**தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 11,876 அரசு மருத்துவமனை கட்டமைப்புகளுடன் தமிழ்நாடு மருத்துவத்துறையில் இந்தியாவில் முதலிடம் பிடித்துள்ளது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் பொருளாதாரச் சுமையை உருவாக்கும் மருத்துவச் செலவையும் கல்விச் செலவையும் குறைத்திடும் நோக்கத்துடன் பல புதிய திட்டங்களை நிறைவேற்றி வரலாறு படைத்துள்ளார்கள்.

மருத்துவத் துறையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் இந்த உண்மையைத் தெளிவுபடுத்தும்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மக்கள் அனைவருக்கும் தரமான மருத்துவ வசதிகளை வழங்கிட வேண்டும் என்பதற்காக புதிய மருத்துவமனைகளை உருவாக்கியுள்ளார்கள். உயர்தர தொழில்நுட்பத்துடன் கூடிய மருத்துவச் சாதனங்களையும் மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளார்கள்.

### புதிய மருத்துவமனைகள்

1. ரூ. 211 கோடியில் 6 தளங்கள் 860 படுக்கைவசதிகளுடன் சென்னை பெரியார் அரசு மருத்துவமனை
2. சென்னை கிண்டியில் ரூ. 240 கோடியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை 1000 படுக்கைகள் மற்றும் 15 அறுவை சிகிச்சை அரங்குகளுடன் கட்டப்பட்டு ரூ.206.08 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் நிறுவப்பட்டு குறுகிய காலத்தில் சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறது
3. புதுக்கோட்டையில் ரூ.68 கோடி செலவில் புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.
4. ரூ.240 கோடியில் காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மேம்படுத்தப்பட்டு ரூ. 32 கோடியில் சிறப்பு உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன.
5. ரூ.34.6 கோடி செலவில் சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை ரோபோட்டிக் அறுவை சிகிச்சை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.



**ரூ. 4179 கோடியில் 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டடங்கள்**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் புதிதாக தொடங்கப்பட்ட 11 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான மருத்துவமனை கட்டடங்களைக் கட்டியுள்ளார். அரியலூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், உதகமண்டலம், இராமநாதபுரம், திருப்பூர், விருதுநகர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் புதிதாகத் தொடங்கப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் ரூ.4,179 கோடி செலவில் 6100 படுக்கைகளுடன் கட்டி முடிக்கப்பட்டு 12.1.2022 அன்று திறந்துவைக்கப்பட்டன.

### 11,876 மருத்துவமனைகளுடன் அரசு மருத்துவமனை கட்டமைப்புகளில் தமிழ்நாடு முதலிடம்!

இந்தியாவில் 36 மாநிலங்கள் இருந்தாலும், அனைத்து மாநிலங்களையும் விட 11,876 அரசு மருத்துவமனைகளுடன் மருத்துவக் கட்டமைப்பைப் பெற்றுச் சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது தமிழ்நாடு.

முதலமைச்சர் அவர்கள் சி.டி. ஸ்கேன் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே போன்ற 99,668 மருத்துவ சாதனங்களை ரூ.1,789 கோடியே 14 இலட்சம் செலவில் புதிது புதிதாக வாங்கி அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளார்கள்.

இந்த புதிய மருத்துவ சாதனங்களுடன் பொதுமக்கள் அதிக அளவில் பயன்பெற்று வருகின்றனர். இவற்றுடன் திராவிட நாயகர் ஆட்சியில் புதிய பல மருத்துவ திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

### மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்

தமிழ்நாடு முழுவதிலும் தொற்றா நோய்களுக்கான அரசு மருத்துவச் சேவைகளை மக்கள் வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கும் இத்திட்டத்தின்கீழ் 264 கோடி பேர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தைப் பாராட்டி யுனெஸ்கோ நிறுவனம் முதலமைச்சர் அவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

### நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 1,180 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 17 இலட்சத்து 53 ஆயிரம் மக்கள் கட்டணமின்றி மருத்துவச் சேவைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

### இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48

இத்திட்டத்தின் கீழ் ரூ.467 கோடியே 61 இலட்சம் செலவில் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு சாலை விபத்தில் காயமடைந்து ஆபத்தான நிலையில் தவித்த 4 இலட்சத்து 91 ஆயிரம் பயனாளிகள் நலம் பெற்றுள்ளனர்.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1 கோடியே 88 இலட்சத்து 44 ஆயிரம் பேர், 6,768 கோடியே 75 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை உதவியுடன் பல்வேறு சிகிச்சைகள் பெற்றுப் பயன் அடைந்துள்ளனர்.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

மகப்பேறு காலத்தில் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா 18 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் இத்திட்டத்தில் 34 இலட்சத்து 54 ஆயிரம் கர்ப்பிணி பெண்களுக்கு 2,310 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### பாதம் காப்போம் திட்டம்

இத்திட்டம் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு பாதங்களில் புண் ஏற்படுவதைத் தடுத்துப் பாதுகாத்திட அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பாதப் பரிசோதனை சிகிச்சைகள் 83 இலட்சத்து 78 ஆயிரம் பேருக்குச் செய்யப்பட்டு மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டுள்ளது.

### பள்ளிச் சிறார் கண்ணொளி காப்போம் திட்டம்

இத்திட்டத்தில் 41 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு கண் பரிசோதனைகள் செய்யப்பட்டு பார்வை குறைவுடைய 10 இலட்சத்து 35 ஆயிரம் குழந்தைகளுக்குக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

### முதல்வர் மருந்தகம் திட்டம்

இத்திட்டத்தில் 1000 முதல்வர் மருந்தகங்கள் நிறுவப்பட்டு 45 இலட்சத்து 35 ஆயிரம் பொதுமக்களுக்கு, 75 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் 25 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்புடைய மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

### ஊட்டச்சத்தினை உறுதிசெய் திட்டம்

1,06,916 குழந்தைகளுக்கும், 76,705 தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்துப் பெட்டகங்கள் வழங்கப்பட்டு முதல் கட்டத்தில் 47,469 குழந்தைகளும், இரண்டாம் கட்டத்தில் 61,846 குழந்தைகளும் இயல்பு நிலையைப் பெற்றனர்.

### குழந்தை பிறப்பு இறப்பு விகிதம் சரிவு

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய சிறந்த சாதனங்களை நிர்மாணித்து உயரிய மருத்துவ வசதிகளை மக்களுக்கு அளிப்பதால் 2020 வரை 1000 பிறப்புகளுக்கு 10.4 என்கிற விகிதத்தில் இருந்த குழந்தை இறப்பு விகிதம், தற்போது 7.8 ஆகக் குறைந்திருக்கிறது. அதே போல், ஒரு இலட்சம் மகப்பேறுகளில் உயிரிழக்கும் தாய்மார்கள் 96.6 என இருந்தது. திராவிட மாடல் ஆட்சி வழங்கும் சிறந்த தாய் சேய் நல மருத்துவ உதவிகள் காரணமாக, 39 ஆகக் குறைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மனிதநேய உணர்வுடன் மக்கள் நல்வாழ்வுத்துறையில் 25,295 புதிய பணிநியமனங்களை மேற்கொண்டு; இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்புத் திட்டம் முதலான பல புதிய திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதால் திராவிட மாடல் அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மட்டும் 545 விருதுகளைப் பெற்று இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த மக்கள் நல்வாழ்வுத்துறையாக புகழப்படுகிறது.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எழும்பூர் தெற்கு பகுதி தேர்தல் பணிமனையை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் – சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மேயர் பிரியா ராஜன்,இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதி இளம் சுருதி எம்.சி, பி.எம்.யாழினி, கே.எஸ்.எம்.நாதன், அ.நிர்மலாதேவி மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.